மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்

## க.பொ.த (உ/த)ப் பரீட்சை – 2019
## மாணவர்களுக்கான உதவிக் கருத்தரங்கு

# கிறிஸ்தவ நாகரிகம்

## (49) கிறிஸ்தவ நாகரிகம்
### வினாத்தாள் - II
### பகுதி - I

**01.** 1) கி.பி.முதலாம் நூற்றாண்டில் பலஸ்தீனாவில் இடம்பெற்ற உரோமைய நிர்வாகம் பற்றிய நான்கு விடயங்களை எழுதுக.

- ❖ இலத்தீன் மொழி ஆட்சி மொழியாகவும் நிர்வாக மொழியாகவும் விளங்கியது.
- ❖ உரோமர் சமூக அடிப்படையில் பற்றீசியன் பிளேபியன்ஸ் என்ற இரு பிரிவுகளைக் கொண்டிருந்தார்.
- ❖ உரோமர் நகர் ஏனைய நாடுகளுடன் நெடுஞ்சாலைகளினால் இணைக்கப்பட்டிருந்தன.
- ❖ பல கலாசாரங்களும், பண்பாடுகளும் சந்திக்கும் இடமாக அமைந்தமை
- ❖ உரோமர் தாம் கைப்பற்றிய பகுதிகளை 72 நாடுகளாகவும் 40 மாநிலங்களாகவும் பிரித்து ஒவ்வொரு மாநிலங்களையும் கண்காணிக்க அரச பிரதிநிதிகளாக ஆளுநர்களை நியமித்தனர்.
- ❖ முக்கோண வடிவமைப்பைக் கொண்ட படிமுறை அதிகார அமைப்பு நிலை காணப்பட்டது.

கி.மு.63 இல் படைத்தளபதியான பொம்பேயின் படையெடுப்புடன் பாலஸ்தீனாவில் உரோமையரின் ஆட்சி ஆரம்பமாகிறது. கி.மு.37 இற்குப் பின் பாலஸ்தீனா முழுப்பகுதியும் உரோமையரின் ஆட்சியின் கீழ் வந்தது. இங்கு உரோமைய நிர்வாகம் பற்றிய அம்சங்களாவன

- ❖ பேரரசர் - உரோமையரின் ஆட்சிமுறையில் பேரரசரே அனைத்திற்குமான பிரதான நிர்வாகியாவார். ஆட்சிப் பேரவையை ஆளும் அதிகாரமுடையவர் பேரரசர் என்று அழைக்கப்பட்டார்.
- ❖ ஆளுநர்களை நியமித்தமை- பாலஸ்தீனாவில் உரோமையர் கைப்பற்றிய பகுதிகளை 72 நாடுகளாகவும் 40 மாநிலங்களாகவும் பிரித்து ஒவ்வொரு மாநிலங்களையும் கண்காணிக்க அரச பிரதிநிதிகளாக ஆளுநர்களை நியமித்தனர்.
- ❖ குறுநில மன்னர்கள் - பாலஸ்தீனாவினை உரோமையர் கைப்பற்றியபோது கைப்பற்றிய நாடுகளில் ஏற்கனவே ஆட்சி செய்த அரசர்களை சிற்றரசர்களாக நியமித்தனர்.
- ❖. வரி தண்டுவோர் - பாலஸ்தீனாவைக் கைப்பற்றிய உரோமையர் உரோமைக்குரிய பண வருவாயைப் பெற வரி வசூலிப்பவர்களை அதிகாரிகளாக நியமித்தனர்.

2) ஏரோதியர் ஆட்சியின் நான்கு பண்புகளைத் தருக?

- ❖ இது மேயா பகுதியைச் சேர்ந்தவர்கள்.
- ❖ உயர் குலத்தோர் என்பதில் முன்னிடம் வகித்தனர்.
- ❖ உரோமைப் பேரரசால் பலஸ்தீனாவுக்கு ஆட்சியாளர்களாக நியமிக்கப்பட்டனர்.
- ❖தமது உயர் வாழ்வுக்குத் தேவையான செலவுகளுக்கு உரோமப் பேரரசிற்காக மக்களிடம் வரி வசூலித்தனர்.
- ❖பெரிய ஏரோது இறந்த போது அவர் ஆண்ட பகுதிகள் அவரது மூன்று மகன்களும் பகிர்ந்து கொண்டனர்.
- ❖ தமது பகுதிகளில் கட்டடக்கலை நகராக்கம் போன்ற பணிகளில் ஈடுபட்டனர்.
- ❖ பெரிய ஏரோதுவின் காலத்தில் கட்டடக்கலை. நகராக்கம் போன்றவற்றில் கவனம் செலுத்தப்பட்டது.
- ❖ பாலஸ்தீனாவில் சர்வாதிகாரத் தன்மையுடன், கொடூரத்துக்கும், அக்கிரமத்துக்கும் வழிகோலியது.
- ❖ பெரிய ஏரோதுவின் மூத்தமகன் அர்க்கெலா தனது விருப்பப்படி தலைமைக் குருக்களை மாற்றினார். இவர் கட்டட வேலைகளுடன் எரிக்கோவில் பழமரத் தோப்பு ஒன்றினை நிறுவினார்.
- ❖ 1வது ஏரோது அக்ரிப்பா ஆட்சியில் யூதர்களைத் திருப்திப்படுத்த கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டனர்.

3) யூத தலைமைக்குருக்கள் பற்றிய நான்கு விடயங்களை எழுதுக?

- ❖ இஸ்ரேயலரின் பன்னிரு கோத்திரங்களில் "லேவியர் தோத்திரத்தில் ஆரோன் குடும்பத்தாரும் ஆரோன் குடும்பத்தில் " சாதோக்" வம்சத்தவர் மட்டுமே குருத்துவப் பணி புரிவதில் சிறப்பிடம் பெற்றனர்.
- ❖ சாலமோன் மன்னன் காலத்தில் தலைமைக் குருவாக "சாதோக்" நியமிக்கப்பட்டார். அன்று முதல் சாதோக்கின் குடும்பத்தினர் குருத்துவப் பணியில் முக்கிய இடத்தைப் பெற்றனர்.
- ❖ இஸ்ராயேல் அரசரும் தலைமைக் குருக்களும் சமுதாய நிர்வாகத்தில் இணைந்து செயற்படுவதால் சம அந்தஸ்தில் வைத்து போற்றப்பட்டனர்.
- ❖ குருக்கள் மறை வல்லுநர்கள், குடும்பத் தலைவர்கள் ஆகியோர் அடங்கிய கூட்டத்திற்கு தலைமைக் குருவே தலைமை தாங்கினார்.
- ❖ தலைமைக் குருவாக அர்ப்பணம் செய்யப்பட்ட ஒருவர் தமது வாழ்நாள் முழுவதும் அப்பணியில் நிலைத்து நிற்க வேண்டும்.

- உரோமையர் யூத மக்களின் வாழ்வில் தலைமைக்குரு பெற்றிருந்த செல்வாக்கைக் கண்டு தமக்கு வேண்டப்பட்டவர்களையே தலைமைக் குருக்களாக நியமித்தார்.
- தலைமைக் குருக்களாக வருபவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகக் காணப்பட்டனவர்.
- இஸ்ரயேல் அரசரும், தலைமைக் குருக்களும் சமுதாய நிர்வாகத்தில் இணைந்து செயற்பட்டனர். நாடு கடத்தலின் பின்னர் தலைமைக் குருக்களின் செல்வாக்கு அரசியலிலும், சமயத்திலும் மேலோங்கிக் காணப்பட்டது.
- கி.மு.2 ஆம் நூற்றாண்டில் குருக்கள், மறைவல்லுனர்கள், குடும்பத் தலைவர்கள் ஆகியோர் அடங்கிய கூட்டத்திற்கு தலைமைக் குருவே தலைமை தாங்கினார்.
- சமுதாயத்தில் தலைமைக்குருக்களே மேல் மட்டத்தில் காணப்பட்டனர். இவர்கள் பணக்கார வியாபாரிகளாகவும், நிலச்சுவாந்தர்களாகவும். நாட்டின் முக்கிய பொறுப்புக்களில் இருந்தமையால் செல்வந்தர்களாகக் காணப்பட்டனர்.
- ஆளும் அதிகாரிகளின் முன் யூத மக்களின் பிரதிநிதிகளாகச் செயற்படுவதுடன் யூதரின் நீதி வழங்கும் தலைமைச் சங்கத்திற்கு தலைமை தாங்கினார்.

4) யூத தலைமைச் சங்கம் பற்றிய நான்கு விடயங்களை எழுதுக?
- யூதர்களின் உயர் நீதிமன்றமாக கருதப்பட்டது.
- இது சௌத்தின் சங்கம், பொதுச் சங்கம் எனப் பல பெயர்களால் குறிப்பிடப்படுகின்றது.
- இதில் 71 பேர் அங்கம் வகிக்கின்றனர்.
- தலைமைச் சங்கத்திற்கு காவல் படையினரும் இருந்தனர்.
- யூதர்களின் மதச் சடங்கு தூய்மையையும், சட்டங்களையும் முறையாகக் கடைப்பிடித்து ஒழுக வேண்டும் என்று வலியுறுத்தி நிற்பதே இதன் நோக்கம்.
- எருசலேம் ஆலய வழிபாடுகளை மேற்பார்வை செய்தல். வருமானத்தை உரிய முறையில் பயன்படுத்தல்.
- குற்றங்களை விசாரித்து தீர்ப்பு வழங்கும் அதிகாரத்தைக் கொண்டிருந்தது.
- மரண தண்டனை வழங்கும் அதிகாரம் இருந்தாலும் அதனை நிறைவேற்றும் ஆணையை உரோம ஆளுநர்கள் அளிக்க வேண்டும்.
- இச்சங்கத்தின் அதிகாரம் யூதர்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.
- இதுவே யூதர்களின் உயர்நீதிமன்றமாகக் காணப்பட்டது.
- இது "செனந்திரின் சங்கம், பொதுச் சங்கம், தலைமைச்சங்கம்" எனப் பல பெயர்களால் குறிப்பிடப்படுகின்றது.
- பாலஸ்தீனா உரோமையரின் ஆட்சிக்குட்பட்டிருந்தபோது இச்சங்கத்தினரின் செல்வாக்கு உன்னத நிலையில் இருந்துள்ளது.
- இதில் 71 பேர் அங்கம் வகிக்கின்றனர். இவர்கள் மூன்று நிலைகளில் உள்ளடங்குவர்.
  1. தலைமைக் குருக்களுக்கும் அவரது குடும்பத்தினரும்
  2. மூப்பர்கள், பெரியோர்கள், பிரபுக்களின் தலைவர்கள், மறைநூல் அறிஞர்கள்.
  3. பரிசேயர்
- இந்தச் சங்கத்திற்கு காவல் படையினரும் இருந்தனர்.

5) புராதன பலஸ்தீனாவில் கிரேக்க ஆட்சியின் விளைவாக ஏற்பட்ட நான்கு நன்மையான விளைவுகளைத் தருக?
- அறிவியல் வளர்ச்சிக்கும் பல விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களுக்கும் வித்திட்டது.
- மெய்யியல், தர்க்கம், பௌதிகம், வானியல், கணிதம், கேத்திர கணிதம் எனும் துறைசார் வழியாக தத்துவ ஞானம் என்றும் அறிவியல் துறைக்கு வித்திட்டார்.
- கலை இலக்கியம், நாடகம் போன்ற துறைகளுக்கு வித்திட்டார்.
- பகுத்தறிவிற்கு முதலிடம் வழங்கி, சிறிது, சிக்கல்களை அலசி ஆராய்ந்து முடிவுகளை எடுக்கும் முறையை உலகிற்கு வழங்கினார்.
- பல வழிகளில் புதிய கண்டுபிடிப்புக்களின் முன்னேற்றத்திற்கு பங்களிப்புச் செய்தனர்.
- 1.கிரேக்க மொழி அறிமுகமாகியது.
- கலைக்கூடங்கள், விளையாட்டு மைதானங்கள் குளியலறைகள் என்பன கிரேக்க கட்டிடக் கலை முறைப்படி அமைக்கப்பட்டது.
- மகா அலெக்சாண்டரின் மரணத்தின் பின் எகிப்திய தளபதி தாலமி எருசலேமைக் கைப்பற்றினான். இக்காலத்தில் பழைய ஏற்பாடு எகிப்தில் கிரேக்க மொழியில் மொழி பெயர்க்கப்பட்டது.

❖ இவ்வாட்சியில் பாலஸ்தீனாவின் அதிகாரம் தலைமைக் குருக்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர்கள் தலைமைச் சங்கத்தை ஏற்படுத்தியதுடன் யூதர்களின் சமய - சமூக வாழ்வுக்கான வழிமுறைகளை அமைத்துக் கொடுத்தனர்.

**02.**1) ❖ மிலான் சாசனத்தின் விளைவாக கிறிஸ்தவர்களுக்குக் கிட்டிய நான்கு நன்மைகளைக் குறிப்பிடுக?

❖ கிறிஸ்தவர்களுக்கு இச்சாசனம் முழு மத உரிமை அளித்தது.

❖ துறவிகள், குருக்கள் வரி செலுத்தத் தேவையில்லை.

❖ நன்கொடைகளையும் சொத்துக்களையும் ஆலயங்கள் ஏற்றுக் கொள்ளலாம்.

❖ ஞாயிறு நாட்களில் ஊதியம் பெறும் எந்தவித வேலையும் செய்யக்கூடாதென்றும் அறிவிக்கப்பட்டது. ஆயர்களின் அதிகாரம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

❖ பறிமுதல் செய்யப்பட்ட சொத்துக்கள் கிறிஸ்தவர்களிடம் மீண்டும் கொடுக்கப்பட்டன

❖ திருத்தந்தைக்கு இலாத்திரன் அரண்மனையும் உபகாரச் சம்பளமும் கிடைத்தன.

2) ஐரோப்பிய இனக்குழுக்களுக்கு புனித பெனடிகன் துறவற சபையினர் வழங்கிய நான்கு பணிகளைக் குறிப்பிடுக?

❖ பசியால் இருப்பவர்களுக்கு உணவளித்தல்

❖ நோயாளிகள் வயோதிபர்களைப் பராமரித்தல்

❖ சிறுவர்களுக்குக் கற்பித்தல்

❖ கைத்தொழில் செய்வதில் மக்களுக்கு முன்மாதிரியாக இருந்து தொழிலின் மகத்துவத்திற்கு புத்துயிர் கொடுத்தனர்.

❖ இளம் வயதினருக்கு இலத்தீன் மொழி வாசிப்பதற்கும் எழுதுவதற்கும் கற்றுக் கொடுத்தனர்.

3) மத்திய காலத்து ஐரோப்பியத் திருச்சபையில் காணப்பட்ட நான்கு சீர்கேடுகளைக் குறிப்பிடுக?

❖ திருத்தூதர் காலத்திலிருந்து புனித வாழ்வு, பகிர்வு வாழ்வு, ஏழ்மை, எளிய வாழ்வு, விசுவாச வாழ்வு என்பன மறக்கப்பட்டு இருந்தன.

❖ திருச்சபைத் தலைவர்கள் உலகப் போக்கில் நடந்து, ஆடம்பரமான, சுயநலம் தேடும், சொத்துப் பணப் பேராசை கொண்ட, ஒழுக்கக்கேடான சீர்குலைந்த வாழ்க்கை நடத்தினர்.

❖ கிறிஸ்தவ மக்கள் திருச்சபை, உரோமைப் பேரரசு என இரு சமூக ஸ்தாபனங்களால் ஆட்சி செய்யப் பட்டனர்.

❖ இவ்விரண்டு ஸ்தாபனங்களுக்கிடையில் அதிகாரப் போட்டி பூசல்களும், எழுத்து முரண்பாடுகளுக்கும் யுத்தங்களுக்கும் வழிவகுத்தன.

❖ திருச்சபைத் தலைவர்கள் அரசியல் விவகாரங்களில் தலையிட்டனர்.

4) ❖ ஆன்மீகம் பற்றி புனித சிலுவை யோவான் எழுதிய நான்கு நூல்களின் பெயர்களைக் குறிப்பிடுக?

1. கார்மேல் சபை ஏற்றம்
2. இருண்ட இரவு
3. ஆன்மீகப் பாடல்
4. அன்பின் அணையாச் சுவாலை

5) சிலுவைப் போரினால் ஏற்பட்ட நான்கு தீய விளைவுகளைக் குறிப்பிடுக?

❖ புனித பூமிக்குத் திருப்பணிகள் சுதந்திரமாகச் செல்லக் கூடிய பயணத் தடையை நீக்குவதற்கான நோக்கம் நிறைவேறவில்லை.

❖ கீழ்நாட்டு கிறிஸ்தவர்கள் ஆதரவற்றவர்களாயினர்.

❖ சிலுவைப் போரில் ஈடுபட்டவர்கள் எல்லோரும் உத்தமமானவர்கள் அல்லர். ஆதலால் அவர்களால் திருச்சபைக்கும் அதன் ஒழுக்கத்திற்கும் களங்கம் ஏற்பாது.

❖ போர்களுக்கு தலைமை தாங்கிய அரசர்கள் திருச்சபை மூலம் தங்கள் ஆதிக்கத்தைப் பயன்படுத்தி, ஆன்ம விடயங்களிலும் தலையிட்டார்கள்.

❖ தப்பறயான பேதகமும், கடவுள் மறுப்புக் கொள்கைகளும் பரவ ஆரம்பித்தன.

❖ இப் போர்கள் கிறிஸ்தவ வாழ்வியலில் ஒரு பின்னடைவைத் தோற்றுவித்தது.

**03.**1. புரட்டஸ்தாந்து சீர்த்திருத்தத்திற்கு வழிவகுத்த நான்கு காரணிகளைத் தருக?

2. மாட்டின் லூதரின் நான்கு படிப்பினைகளைத் தருக?

3. புரட்டஸ்தாந்து சீர்திருத்தத்தின் விளைவாக ஏற்பட்ட நான்கு மாற்றங்களைத் தருக?

4. திருத் தெந்தீன் சங்கத்தினால் எடுக்கப்பட்ட நான்கு தீர்மானங்களைத் தருக?
5. பிரான்சியப் புரட்சியின் பின் நிறுவப்பட்ட நான்கு துறவற சபைகளின் பெயர்களைத் தருக?

1. 1513 இல் திருத்தந்தை 2 ஆம் யூலியஸ் உரோமையில் புனித பேதுருவின் பேராலயம் கட்டுவதற்கு நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து, நற்கருணை உட்கொண்டு, பண உதவி செய்வோருக்கு பரிபூரண பலன் உண்டு என்று கூறியமை.
2. உரோமை அப்போதய திருச்சபையில் காணப்பட்ட ஊழல்கள்
3. சுகபோக வாழ்க்கை முறைமைகள்
4. கிறிஸ்தவ நாடுகளுக்கிடையிலான போட்டியும், பொறுமையும், சண்டையும், திருச்சபைக்கும் அரசுகளுக்குமிடையே பிரச்சினைகள் தோன்றியமையும்

02.1. திருச்சபையின் போதனைகளுக்கும், இறையியல் விளக்கங்களுக்கும் திருவிவிலியம் மட்டும் போதும்.
2. ஒருவர் நம்பிக்கையால் மட்டுமே மீட்படைய முடியும்.
3. திருமுழுக்கு, நற்கருணை ஆகிய இரண்டுமே அருளடையாளங்கள்
4. சென்மபாவத்தால் மனித இயல்பு முற்றாக அழிந்துவிட்டது எனவும் அதன் விளைவாக மனிதன் பாவம் செய்யவே தூண்டப்படுகின்றான்.

03.1. திருச்சபையில் திருந்தெந்தீன் பொதுச்சங்கம் கூட்டப்பட்டது.
2. திருந்தந்தையின் வழுவாவரம் முதன்மைப்படுத்தப்பட்டமை.
3. அருளடையாளங்கள் தொடர்பாக விழிப்புணர்வும், விளக்கங்களும் எழுந்தமை.
4. குருக்கள், ஆயர்களின் பணிகளின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டமை.

04.1. திருவிவிலியம், பாரம்பரியம் ஆகிய இரண்டும் திருமறை உண்மைகளின் ஊற்று.
2. பழைய, புதிய ஏற்பாட்டு எல்லா நூல்களும் இறை ஏவுதலால் எழுதப்பட்டவை.
3. புனித பேதுருவும், அவருக்குப் பின் உரிய முறையில் திருத் தந்தையானவர்களுமே திருச்சபைக்குத் தலைவர். திருத்தந்தை வழுவாவரம் பெற்றவர்.
4. ஏழு திருவருட் சாதனங்களும் கிறிஸ்துவால் ஏற்படுத்தப்பட்டவை.
திருமணம் ஒரு திருவருட்சாதனம்.
திருமணப் பிணைப்பு என்றுமே பிரிக்கப்படாத ஒன்று.
இரகசியத் திருமணங்கள் செல்லுபடியற்றவை.

05.1. அமலமரித்தியாகிகள் சபை
2. திருக்குடும்ப கன்னியர்சபை
3. நற்கருணை பரப்புக்கள் சபை
4. கிளறீசியன் சபை

## பகுதி - II

**04.1)** கிரேக்க, உரோம நாகரிகங்களின் மிகச் சிறப்பான பண்புகளை விளக்குக?

யூத நாகரிம் அதன் வளர்ச்சியின் பிற்பட்ட காலப்பகுதியில், யூதர்கள் பபிலோனியாவில் இருந்து தம் தாய் நாடான பலஸ்தீனாவுக்கு சென்ற பின்னர் மேற்கத்தைய நாகரிகங்களான கிரேக்க, உரோமைய நாகரி கங்களின் தாக்கத்திற்கு உள்ளாகினர். அந்த வகையில் இரு நாகரிகங்களின் மிகச் சிறப்பான பண்புகளை நோக்கும் போது கிரேக்க நாகரிகத்தின் பண்புகளாவன.

கலாசாரத் தொன்மையும் மெய்யியல் மேன்மையும், இலக்கிய வளமும் செழுமையும் கொண்ட நாடு கிரேக்க நாடாகும்.இந்நாகரிகம் கிறீட் என அழைக்கப்பட்ட தீவிலிருந்து ஈயோலிய. அயோனிய, டோரிய இனங் களின் கலப்பினால் உருவாகியது.

கிரேக்க மொழி "கற்றோரின் மொழி" என அழைக்கப்பட்டது. இந்நாகரிகம் அறிவியல் வளர்ச்சிக்கும், பல விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களுக்கும் வழி வகுத்தது. கிரேக்கர்கள் பல்துறைசார் பங்களிப்புக்களாக மெய்யி யல், தர்க்கம், பௌதிகம், வானியல், கணிதம், கேத்திர கணிதம் எனும் துறைகள் வழியாக தத்துவ ஞானம் என்னும் அறிவியல் துறைக்கு வித்திட்டனர்.

மேலும் சாஸ்திரம், புவியியல், தாவரவியல், விலங்கியல், மருத்துவம்,விளையாட்டு போன்ற துறைகளில் வெற்றியும் கண்டனர். இவ்வாறே கலை இலக்கியம் நாடகம், போன்ற துறைகளுக்கும் வித்திட்டனர். தனிமனித ஆற்றலை வளர்ப்பதில், உடற்பயிற்சி, விளையாட்டுப் போட்டிகளில் திறமையாகச் செயற்பட்டோ ரைக் கௌரவிக்கும் முறைமைக்கும் இராணுவப் பயிற்சிச் செயற்பாடுகளுக்கும் முக்கியத்துவம் அளிக் கப்பட்டது.

பகுத்தறிவிற்கு முதலிடம் வழங்கி, சிந்தித்து சிக்கல்களை அலசி ஆராய்ந்து முடிவுகளை எடுக்கும் முறையை உலகிற்கு வழங்கி பல வழிகளிலும் புதிய கண்டுபிடிப்புக்களிலும் முன்னேற்றத்திற்கு பங்க ளிப்புச் செய்தனர்.

## உரோம நாகரிகத்தின் பண்புகள்

உரோமைய நாகரிகம் தைபர் ஆற்றின் கரையோரத்தில் அமைந்துள்ள உரோமைநகர். இலத்தீன் மக்கள் குழுவினரின் வதிவிடமாகவும் வாணிப மையமாகவும் விளங்கியது.

உரோமை நகர் ஏனைய நாடுகளுடன் நெடுஞ்சாலைகளினால் இணைக்கப்பட்டிருந்தமையால் பல கலா சாரங்களும் பண்பாடுகளும் சந்திக்கும் இடமாக மாறக் காரணமாக இருந்தது.

உரோமப் பேரரசின் காலத்தில் ஐரோப்பா முழுவதும் மத அடிப்படையிலும் அரசியல் அடிப்படையிலும் நாகரிக அடிப்படையிலும் ஒற்றுமை நிலவியது.

இலத்தீன் மொழியானது பேரரசின் ஆட்சி மொழியாகவும் நிர்வாக மொழியாகவும் விளங்கியது. பல ஐரோப்பிய மொழிகளுக்கு தாய் மொழியாக விளங்கியது. உரோமையர் சமூக அடிப்படையில் பற்றீசியன், பிளேபியன்ஸ் என்ற இரு பிரிவினர்களைக் கொண்டிருந்தனர். முக்கோண வடிவமைப்பைக் கொண்ட படிமுறை அதிகார அமைப்பு நிலை உரோமைய அரசியல் சமூக மட்டத்தில் காணப்பட்டது.

உரோமர்கள் கட்டிடக் கலையில் சிறந்து விளங்கினர் என்பதற்கு இவர்களால் நிர்மாணிக்கப்பட்ட பொதுப்பாதைகள், பாலங்கள், அணைக்கட்டுக்கள், துறைமுகங்கள், களியாட்ட அரங்குகள் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

இவ்வாறாக கிரேக்க, உரோமை நாகரிகங்களின் மிகச் சிறப்பான பண்புகள் விளங்குகின்றன.

2) இலங்கையொரு பன்மைத்தன்மையான நாடு என்னும் நிலையில் இலங்கையில் இன, மத இணக்கப் பாட்டினை ஏற்படுத்துவதில் கிரேக்க, உரோமை நாகரிகங்களிலிருந்து நாம் கற்றுக் கொள்ளக் கூடிய படிப்பினைகள் எவை?

இலங்கை பன்மைத் தன்மையான நாடாகும். இங்கு இன, மத, வேறுபாடுடைய சமூகத்தினர் காணப்படு கின்றனர். ஒரு நாட்டின் மேம்பாட்டிற்கு சகல இன, மத மக்களும் ஒன்றுபட்டு தங்களாலான பங்களிப்புக் களை வழங்க வேண்டும். கிரேக்க உரோம நாகரிகங்கள் உலக நாகரிக வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்த நாகரிங்களில் முக்கியமானவையாகும்.

கிரேக்க மனித சமூகத்தின் மேம்பாட்டிற்குப் பெரும் பங்களிப்புச் செய்துள்ளனர். அத்துடன் அறிவியல் வளர்ச்சிக்கும் பல விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களுக்கும் வித்திட்ட நாகரிகமாகும். அரசியல், மெய்யியல், தர்க்கம், பௌதிகம், புவியியல், வானவியல், கணிதம், கேத்திரம், இலக்கியம், கலை, மருத்துவம் விளை யாட்டு என பல துறைகளிலும் பங்களிப்புச் செய்துள்ளது. கிரேக்கப் பேரரசு பலஸ்தீனா உட்பட பல்வேறு நாடுகளில் பரவியிருந்த கால கட்டத்தில் கிரேக்க நாகரிகம், இன, மத, மொழி வேறுபாடில்லாமல் தாம் கைப் பற்றிய நாடுகளின் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்துள்ளமையைக் காணலாம். இதனால் எல்லா இன மக்களும் அதன் பயனடைந்தார்கள்.

பகுத்தறிவிற்கு முதலிடம் வழங்கி சிந்தித்து சிக்கல்களை அலசி ஆராய்ந்து முடிவுகளை எடுக்கும் முறையை உலகிற்கு வழங்கி பல வழிகளிலும் புதிய கண்டுபிடிபுக்களிலும் முன்னேற்றத்திற்கு பங்களிப்புச் செய்தவர்கள் கிரேக்கர்கள்.

அவ்வாறே உரோம நாகரிகமும் பேரரசும் தாம் கைப்பற்றிய நாடுகளில் உள்ளவர்கள் எந்த மதம், இனம் என்ற வேறுபாடில்லாமல் அவர்கள் சுதந்திரமாக செயற்பட உதவியதுடன் தான் கைப்பற்றிய நாடுகளில் அபிவிருத்தியிலும் அக்கறையுடன் செயற்பட்டு அந்தந்த நாடுகளின் சமூக மேம்பாட்டிற்கும் அபிவிருத்திக்கும் பங்களிப்புச் செய்துள்ளமையைக் காணலாம்.

இவ்விரு நாகரிகங்களில் இருந்து நாம் இவ்வாறான படிப்பினைகளைப் பெற்றக் கொள்வதுடன் எமது நாடும் பல இன, மதங்களை கொண்ட நாடாகும். இலங்கை அரசானது, இங்கு வாழும் சகல தரப்பினரின் உரிமைகளை மதித்து அவர்களுக்கு வழங்குதல் ஊடாக ஒவ்வொரு இனமும் மதமும் எதிலும் தனித்து வமான பண்புகளை வளர்ப்பதுடன் நாட்டின் முன்னேற்றத்திற்கும் தங்களைத் தியாகம்செய்து பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களிலும் பங்களிப்புச் செய்து பல துறைகளிலும் நாடு வளர்ச்சியடையச் செய்தனர்.

05.1) மலைப் பொழிவு பற்றிச் சுருக்கமாக விளக்குக?

இயேசுவின் இறையரசு பற்றிய ஐந்து அறிவுரைகளில் மலைப் பொழிவு முதலாவதாகும். இயேசு தமது இறையாட்சிப் பணியை ஆரம்பித்தபோது அவர் தேர்ந்து கொண்டவர்களும், அவரிடம் வந்தவர்களும் கடைப்பிடித்து வாழ வேண்டிய பண்புகள், விழுமியங்கள், அறநெறிகள், அவர்களிடத்தே வளர வேண்டிய மனநிலை பற்றியும் அவர்களுக்குக் கற்பித்தனர். இப்படிப்பினைகள் பல்வேறு சந்தர்ப்பங்களில், வேறுபட்ட இடங்களில் இயேசுவால் வழங்கப்பட்டவையாகும். இவற்றின் தொகுப்பே மலைப் பொழிவு அறிவுரையாகும்.

இயேசு மக்கள் கூட்டத்தைக் கண்டு மலைமீது ஏறி அமர்ந்து தமது அறிவுரையை வழங்கியதாக மத்தேயு குறிப்பிடுகிறார். மோசே சீனாய் மலையில் ஏறி இஸ்ராயேலர் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கச் சட்டத்தைக் கொடுத்தது போல, இயேசுவும் மலை மீது அமர்ந்து இறையாட்சியின் சமூகத்தை உருவாக்குவதற்கு மக்களுக்குக் கற்பிக்கின்றார். அவை எரேமியா இறைவாக்கினர் கூறுவது போல அவர்களின் இதயங்களில் எழுதப்பட்ட புதிய உடன்படிக்கையாகும். இயேசுவின் மலைப்பொழிவு அறிவுரையில் பின்வரும் விடயங்கள் காணப்படுகின்றன.

1. எட்டுப் பேறுகள்
2. சீடர்களின் இறையாட்சி வாழ்வின் தன்மை.
3. அடிப்படைக் கோட்பாடும் ஒழுக்க நெறியும்
4. இறைவனுடன் உறவு
5. உண்மைச் செல்வமும் அதனைத் தேடலின் விளைவும்
6. பொன் விதி

எட்டு பேறுகளில் ஒரு இறைவாக்கினரின் செய்தியாகும். இறைவனுக்கு ஏற்புடையவர் ஆவதற்கு இறைவனின் பண்புகளை நன்மைத் தனத்தை ஏழை எளியவர்கள். துன்புறுவோர் நோய்வாய்ப்பட்டோர் ஆகியவர்களுடன் திறந்த மனதுடன் வாழ வேண்டும் என்கிறார் இயேசு.

ஏழையரின் உள்ளத்தோரால், கனிவுடையோராய் நீதியும், நேர்மைத்தன்மை கொண்டேராய். இரக்கமுடைய தூய உள்ளத்தவராய் இருந்தால் இறையாட்சி வாழ்வுக்கு தகுதியுடையவராவோம் என்பது இயேசுவின் படிப்பினையாகும்.

சீடர்களின் இறையாட்சி வாழ்வின் தன்மை பற்றி உப்பும், ஒளியும் ஆகிய உருவகங்கள் வழியாக குறிப்பிடுகின்றார். இயேசுவின் சீடர்களும் மண்ணுலகில் உப்பாகவும் ஒளியாகவும் இருக்க வேண்டும் என இயேசு கூறுகின்றார்.

அடிப்படைக் கோட்பாடும் ஒழுக்க நெறியும் பற்றி அளித்த விளக்கங்கள் எதிர்க் கூற்றுக்களாகும். அவை அயலவருடன் கொள்ளும் உறவில் பின்பற்றப்பட வேண்டிய நெறிகளாகும். எடுத்துக் காட்டாக சினங்கொள்ளுதல், விபசாரம். ஆணையிடுதல், பழி வாங்குதல், பகைவரிடம் அன்பு ஆகியனவாகும்.

இறைவனுடனான உறவு என்பதில் தர்மம் செய்யும் போது " உங்கள் வலக்கை செய்வது இடக் கைக்கு தெரியாதிருக்கட்டும்" என்கிறார். இறை வேண்டுதல் செய்யும் போது பிற இனத்தவரைப் போல் பிதற்ற வேண்டாம்" ஏனெனில் நீங்கள் கேட்கும் முன்னரே உங்கள் தேவையை உங்கள் தந்தை அறிவார்" என்கிறார். நோன்பிருக்கும் போது பிறர் அறியாதபடி நோன்பிருக்கும்படி கூறுகிறார்.

உண்மைச் செல்வமும், அதனைத் தேடலின் விளைவும் என்பதில் " அனைத்திற்கும் மேலாக அவரது ஆட்சியையும் அவருக்கு ஏற்புடையதையும் நாடுங்கள் என்கிறார்"

பொன் விதியில் " பிறர் உங்களுக்குச் செய்ய வேண்டும் என விரும்புகின்ற எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" என்கிறார்.

இவ்வாறான விடயங்களை இயேசு தமது மலைப்பொழிவு பற்றிய படிப்பினையில் விளக்குவதனைக் காணலாம்.

2) நீதியான சமுதாயத்தை நிறுவுவதில் மலைப் பொழிவின் மதிப்பீடுகள் கற்பிக்கும் பயன்பாட்டை விளக்குக?

இன்றைய சமுதாயமானது பல வழிகளிலும் சீர்கேடுகளைச் சந்தித்து சிதைந்துபோய்க் கொண்டிருப்பதுடன் பணத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து மனிதமாண்பினை இழந்து போய்க் கொண்டிருப்பதனைக் காணலாம்.

எட்டுப் பேறுகளில் ஏழையின் உள்ளத்தோராய் கனிவுடையோராய், இரக்கமுடையோராய், தூய உள்ளத்தவராய் இருக்கும் போது நீதியான சமூகத்தினை உருவாக்க முடியும்.

அவ்வாறே உப்பும், ஒளியும் எவ்வாறு பிறருக்குப் பயன்படுகின்றதோ அவ்வாறே மனிதர்களாகிய நாமும் எம்மில் உள்ள சுயநலங்களைக் களைந்து பிறருக்குப் பயன்படும் மனிதர்களாக மாறும் போது அங்கே நீதியான சமுதாயத்தினை நிறுவ முடியும்.

அடிப்படைக் கோட்பாடும் ஒழுக்க நெறியும் என்பதில் யூதர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட திருச்சட்டத் திற்கும் இயேசு அளித்த எதிர்க்கூற்றுக்கள் அயலவருடன் நாம் கொள்ளும் உறவில் பின்பற்றப்பட வேண்டிய நெறிகளாகும். சினங்கொள்வது மற்றவருடன் கொண்டுள்ள உறவைப் பாதிக்கும். ஆகவே சினங்கொள் ளாது மற்றவருடன் நல்ல உறவைப் பேண வேண்டும். அவ்வாறே பழி வாங்கும் எண்ணம் எம்மி டையே வளர்ந்தால் அது சமூகத்தில் தவறான விளைவுகளை ஏற்படுத்தும். ஆகவே பழிவாங்கும் எண்ணத்தைக் கைவிட வேண்டும்.

அது போல் சமுதாயத்தில் ஆண்களோ பெண்களோ தவறான எண்ணத்துடன் மற்றவர்களுடன் பழகும் போது அது சீர்கேடான சமுதாயத்தைத் தோற்றுவிக்கும். அவ்வாறல்லாது யாரையும் இச்சையுடன் நோக்காது தூய்மையான உள்ளத்தோராய் வாழும் போது அங்கே நல்ல சமுதாயம் உருவாகும்.

இன்று பலர் பொய்ச் சாட்சி சொல்லி பிறருக்குத் தண்டனை வழங்குகிறார்கள். அவ்வாறு செய்வது பாவ மாகும். பலருக்கும் அது துன்பத்தையே விளைவிக்கும். எனவே நாம் எப்போதும் உண்மை பேசுபவர்க ளாக வாழும் போது உண்மையான நீதியான சமுதாயம் உருவாகும்.

பகைவர்களிடம் வெறுப்புக் கொள்ளாது அவர்களை அன்பு செய்து அவர்களுக்கு உதவி செய்யும் போது நல்ல உறவுகளை வளர்க்க முடியும்.

இறைவனுடனான உறவில் தருமம் செய்யும் போது தூய்மையான உள்ளத்துடன் ஏழை எளியவருக்கு தர்மம் செய்வதானால் அவர்கள் வாழ்வில் ஒளியாக மாற முடியும். இறை வேண்டல் செய்யும் போதும் பிற இனத்தவரைப் போல் பிதற்றாமல் இறைவன் முன்னிலையில் தூய்மையான மனதுடன் செபிக்க வேண்டும்.

நோன்பு நோற்றாலும் ஏழை எளியவரின் பசியை உணர ஒரு சந்தர்ப்பமாகும். பொய்களை ஒறுத்து தியாகம் செய்து வாழும் போது நாம் நீதியான சமுதாயத்தை உருவாக்க முடியும்.

அவ்வாறே பொன் விதியும் எங்களுக்குப் பிறர் என்ன செய்ய வேண்டும் என்று நினைக்கின்றோமோ அதை நாம் மற்றவர்களுக்குச் செய்யும் மனப்பாங்கை எம்மில் வளர்க்க வேண்டும்.

இவ்வாறாக நீதியான சமுதாயத்தை உருவாக்குவதில் மலைப் பொழிவு படிப்பினைகள் நல்ல பயன்பாடுகளைத் தருவதனை உணர்ந்து கொள்ளலாம்.

06. 1) கிறிஸ்தவத்தின் முதல் மூன்று நூற்றாண்டுகள் காலத்தில் கிறிஸ்தவர்கள் எதிர்கொண்ட சவால்களை உதாரணங்களுடன் விளக்குக.

திருச்சபையின் வரலாற்றில் கிறிஸ்தவர்கள் முதல் மூன்று நூற்றாண்டுகள் யூதகலாபனைகளாலும், உரோமையகலாபனைகளாலும் பல துன்பங்களை அனுபவித்தனர். இக்காலத்தில் கிறிஸ்தவர்கள் தங்கள் வழிபாடுகளை வெளிப்படையாக மேற்கொள்ளவோ, கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளவோ முடியாத நிலை ஏற்பட்டது. ஆதலால் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டு அவர்கள் உயிர்கள் பறிக்கப்பட்டன. அவர்கள் நாடு கடத்தப்பட்டார்கள். சொத்துக்கள் உடைமைகள் அழிக்கப்பட்டன. பறிக்கப்பட்டன. கிறிஸ்தவர்கள் தங்கள் இடங்களை விட்டு வெளியேறினார்கள். கிறிஸ்தவர்களின் வழிபாட்டு மையங்கள் தகர்க்கப்பட்டன.

இந்நிலையில் கிறிஸ்தவர்களின் விசுவாசம் உறுதியாய் இருந்தது. அவர்கள் தங்கள் வழிபாடுகளை இரகசியமாகவும், இரவு வேளைகளிலும் மேற்கொண்டனர். இக்காலத்தில் நீரோ, தொமிசியன், திராஜன், மார்க்கு அவுரேலியன், செப்திரஸ் செவரஸ், மாக்ஸ்ஸிமியன், தீசியுஸ், வலேரியன், அவுரேலியன், தியோக்கிளேசியன் போன்ற உரோமைய சக்கரவர்த்திகளால் பல காரணங்களை முன்னிட்டுத் துன்புறுத்தப்பட்டனர். இக்காலத்தில் கிறிஸ்தவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். காட்டு மிருகங்களின் தோலால் போர்த்தப்பட்டு நாய்களுக்கு உணவாகப் போடப்பட்டனர். உடல்களுக்கு கெந்தகங்கள் பூசப்பட்டு இரவில் எரியும் வர்த்திகளாகப் பாவிக்கப்பட்டார்கள். சிரச்சேதம் செய்யப்பட்டார்கள், மரணதண்டனை விதிக்கப்பட்டது. இரும்புக்கட்டிலில் இடப்பட்டுச் சுடப்பட்டார்கள். உடல்கள் குறடுகளால் கிழிக்கப்பட்டன. சுரங்கங்களில் நிலவறைகளில் புதைக்கப்பட்டார்கள்.

இச்சூழ்நிலையில் பேதுரு பவுல் கிறிஸ்தவர்களின் விசுவாசத்தை உறுதிப்படுத்தி ஊக்குவிப்பதற்காக செயற்பட்டபோது நீரோ அவர்களை சிறையில் அடைத்து பேதுருவை தலைகீழாக சிலுவையில் அறைந்தும்,

பவுலை சிரச்சேதமும் செய்தான். மேலும் பெலவேந்திரர், திமோத்தேயு, சிமியோன், இஞ்ஞாசியார், யுஸ்தின், சிசிலியம்மாள், போதினுஸ், பிளாந்தினாள், சிம்போரின், இரேணயுஸ், பெர்ப்பெத்துவா, பெலிசித்தா, போன்சியன் அந்திரே, டயோனிசியுஸ், பபியன், லோறன்சியார், சிப்பிரியுன், பெலிக்ஸ், தேனிஸ், கோனோன் எனப் பலர் இக்காலத்தில் இத்தகைய கொடூரமான துன்பங்களை அனுபவித்து வேதசாட்சி மரணங்களைத் தழுவிக் கொண்டனர்.

பத்தாம் கலாபனைக்காலத்தில் தியோக்கிளேசியன் ஆட்சிக்காலத்தில் குறிப்பாக செபஸ்தியார், தார்சியுஸ், காஸமாஸ், தமியான், பெலிக்ஸ் போன்றவர்கள் வேதசாட்சி மரணங்களைத் தழுவிக் கொண்டனர். ஆதலால் இக்காலம் வேதசாட்சிகளின் யுகம் என்று அழைக்கப்பட்டது.

இவ்விதம் கிறிஸ்தவர்கள் முதல் மூன்று நூற்றாண்டுகளிலும் பல சவால்களை எதிர்கொண்டனர். இத்தயை சவால்கள் மத்தியிலும் திருச்சபை இக்காலத்தில் வளர்ந்தது போல வேறு எக்காலத்திலும் வளர வில்லை . ஆதலால் இக்காலம் வீரவரலாற்றுக் காலம் என்று அழைக்கப்படுகின்றது.

ii. நற்செய்தி மதிப்பீடுகளின் உண்மையான சான்று வாழ்விற்கு கிறிஸ்தவர்கள் எதிர்கொள்ளும் சவால்களைத் தெளிவுபடுத்துக.

கிறிஸ்தவர்களின் வாழ்வு பல சவால்கள் நிறைந்த வாழ்வாகும். ஏனெனில் கிறிஸ்துவைப் பின்பற்றும் ஒவ்வொரு சீடனும் கிறிஸ்துவின் சிலுவையைச் சுமப்பதற்கு தயாராக இருக்க வேண்டும். ஏனெனில் நற் செய்தி மதிப்பீடுகளின் வாழ முற்படுபவர்களுக்கு வாழ்வில் பல துன்பங்கள் காத்திருக்கின்றன. இம் மதிப்பீடுகளின் படி வாழ முற்படும் போது அவ்வாழ்வில் பல சவால்கள் உள்ளன. ஏனெனில் ஒருவன் கிறிஸ்து வின் போதனைகளைப் பின்பற்ற முற்படும் போது அவனது பல துன்பங்களும் துயரங்களுமே காத்திருக் கின்றன. இயேசுவின் போதனைகளின் படி வாழ்வதென்பது இலகுவான காரியமல்ல. அது சவால் நிறைந்த தாகும்.

இயேசுவின் போதனைகளில் சிலவற்றை நோக்கின் ஒருவன் உனது வலக்கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு உன் இடது கன்னத்தையும் காட்டு. பகைவரையும் அன்பு செய்யுங்கள், உங்களைத் துன்புறுத்து வோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள், ஒருவன் குற்றம் செய்தால் அவனை ஏழு முறையல்ல எழுபது தடவை ஏழு முறை மன்னியுங்கள், தன் நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதை விட மேலான அன்பு வேறேதுமில்லை என்ற போதனைகளின்படி சாதாரணமான மக்கள் வாழ்க்கையில் வாழ்வதென்பது முடியாத ஒன்றாகும்.

இத்தகைய நற்செய்தி மதிப்பீடுகளின் படி வாழ முற்படும் போது கிறிஸ்தவர்கள் பல சவால்களை எதிர் கொள்ள வேண்டிய நிலை ஏற்படும். இயேசு இவ்வாழ்க்கையை வாழ்ந்து காட்டினார். அதற்காகப் பல துன்பங்களையும் துயரங்களையும் அனுபவித்தார். ஏன் தன்னுயிரையே கொடுத்தார். இத்தகைய வாழ்வு தான் கிறிஸ்தவ வாழ்வாகும். ஆதலால் இத்தகைய நற்செய்தி மதிப்பீடுகளின் படி வாழ்வதற்கு கிறிஸ்தவர்கள் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டும்.

07. 1. இலங்கையின் கல்விக்கு இரண்டு கிறிஸ்தவத் தலைவர்கள் வழங்கிய பங்களிப்பு பற்றி கட்டுரை வரைக.

இன்று இலங்கை தென் கிழக்காசியாவிலேயே படித்தவர்களின் தொகை விகிதாசாரப்படி 92% பெற்று முதலிடத்தில் இருக்கின்றது. அதற்குக் காரணம் இலங்கையில் கிறிஸ்தவக் கல்விமான்களினதும், துறவிகளினதும் பங்களிப்புக் கூடுதலாக உள்ளமையே ஆகும். இத்தகைய கல்வி வளர்ச்சிக்கு பணியாற்றிய கிறிஸ்தவத் தலைவர்களாகப் பின்வருபவர்களைக் குறிப்பிடலாம்.

ஆயர் பொன்ஜின் அ.ம.தி
அருட்பணி எச். எஸ். தாவீது
அருட்பணி சுவாமி ஞானப்பிரகாசர் அ.ம.தி
அருட்பணி எஸ். ஜி. பெரேரா, அருட்பணி பீற்றர் பிள்ளை அ.ம.தி
திரு. வில்லியம் விக்கிரமசிங்க, ஆயர் எட்மன் பீரிஸ் அ.ம.தி
திரு. ஆர். எஸ். டி சேரம் இவர்களின் பின்வரும் இருவர் வழங்கிய பங்களிப்பை நோக்குவோம்.

**அருட்பணி சுவாமி ஞானப்பிரகாசர் அ.ம.தி.**

சுவாமிஞானப்பிரகாசர் அடிகள் ஒரு தலைசிறந்த கல்விமான் மட்டுமல்ல, வடமொழியிலும் இந்து

மெய்யியலிலும் நன்கு அறிவுள்ளவராகக் காணப்பட்டார். யாழ் வரலாற்றுக் கல்வியை கற்றுப் பல பணிகளை ஆற்றினார். இவர் தமிழ்மொழியை கடவுள் தந்த மொழியென ஏற்று மிகவும் நேசித்தார். தமிழ்மொழி பற்றிய பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டு தமிழ்மொழியின் தொன்மை, சிறப்பு ஆகிய தனித் தன்மைகளைக் கூறி ஆய்வுகளை எழுதியுள்ளார். இதுவே ஆரம்பத்தில் பேசப்பட்டு வந்த மொழி. இம்மொழியிலிருந்தே ஏனைய சகோதர மொழிகள் பல பிறந்துள்ளன என நிரூபித்தார். இவர் தமிழ் மொழியில் எழுதிய சில நூல்களாவன.

1. யாழ்ப்பாண வைபவமாலை ஊற்றுக்கள்
2. போர்த்துக்கேயர் கால அரசர்கள்
3. யாழ்ப்பாண வைபவ விமோசனம்
4. யாழ் வரலாற்றுக் கல்வி ஊற்றுக்கள்
5. 25 ஆண்டு கத்தோலிக்கத்தின் வளர்ச்சி

இவர் நூல்கள் மட்டுமன்றி பல தமிழ் அகராதிகளையும் எழுதியுள்ளார். இவர் பல மொழிகளைக் கற்றிருந்தமையால் "பன்மொழிப் புலவர்" என அழைக்கப்படுகின்றார். இவ்விதம் தமிழ் கலாசாரத்திற்குப் பல பணிகளைப் புரிந்துள்ளார்.

**அருட்பணி எஸ். ஜி. பெரேரா**

இவர் இயேசு சபையிலே திருநிலைப்படுத்தப்பட்ட முதல் சுதேச குருவாவார். உரோமையிலுள்ள கிரகோரியன் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றினார். காலிமறைமாவட்டத்தில் முதலாவது சிங்களக் குருமுதல்வராகப் பணியாற்றினார். அத்துடன் காலி தூய அலோசியஸ் கல்லூரி ஆசிரியராகவும், மாத்தறை தூய சேவாசியுஸ் கல்லூரியின் அதிபராகவும் பணியாற்றினார்.

இவர் சிங்களம், ஆங்கிலம் மேலும் ஐரோப்பிய மொழிகளையும் நன்கு கற்றறிந்தார். இவர் மொழி பெயர்த்த நூல்களில் சிறப்பானவை போர்த்துக்கேய மொழியிலே பேர்மா டி குவேறோஸ் என்பவரால் எழுதப்பட்ட நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

இவற்றை விடப் பல சிங்கள நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து சிங்களக் கலை, கலாசாரம், வரலாறு என்பவற்றை உலகறியச் செய்துள்ளார். இவற்றுள் தலைசிறந்தது "சுபசித்த வமனவ" என்ற நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தமையாகும்.

இவர் பல நூல்களையும் அதிகமான ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இவர் எழுதிய இலங்கை வரலாறு என்ற ஆங்கில நூல் நீண்டகாலமாக இலங்கையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வரலாற்றுப் பாட நூலாகத் திகழ்ந்தது.

இவர் இலங்கை இலக்கியப் பதிவேட்டின் ஆசிரியராகவும், இலங்கை வரலாற்றுக் குழு றோயல் ஏசியாற்றிக் சொசையிற்றி ஆகியவற்றின் அங்கத்தவராகவும் பணிபுரிந்தார்.

இவர் இலங்கை வரலாற்றிலே புரிந்த சேவையைப் பாராட்டி 1983இல் இலங்கை அரசு இவரது உருவம் தாங்கிய தபால் முத்திரை ஒன்றை வெளியிட்டமையும் குறிப்பிடத்தக்கது.

ii. இலங்கையின் இரண்டாம் நிலைக் கல்வி மேம்பாட்டிற்குத் திருச்சபை வழங்கக் கூடிய பங்களிப்புப் பற்றிக் கட்டுரை வரைக.

இலங்கையின் கல்வி மேம்பாட்டிற்கு திருச்சபை பல பங்களிப்புக்களை ஆற்றி வந்துள்ளது. இலங்கைத் திருச்சபை வரலாற்றிலே ஐரோப்பியரின் வருகையுடன் இலங்கையின் கல்வி வளர்சிக்கு திருச்சபை ஆற்றிய பங்கு குறிப்பிடத்தக்கது. குறிப்பாக போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சிக்காலங்களில் கல்வி வளர்ச்சிக்கு பல துறவற சபைகள் பங்காற்றியுள்ளன. இத்துறவற சபைகள் பல பாடசாலைகளை அமைத்து இப்பாடசாலைகளில் ஆரம்பக்கல்விக்கு, இடைநிலைக்கல்விக்கு, உயர்கல்விக்கு பல பணிகளை ஆற்றியுள்ளன.

இவர்களைத் தொடர்ந்து இலங்கையின் கல்வி மேம்பாட்டிற்கு திருச்சபை தொடர்ந்து பல பங்களிப்புக்களை ஆற்றி வருகின்றது. இன்றும் திருச்சபை குறிப்பாக இரண்டாம் நிலைக் கல்வி மேம்பாட்டிற்கு பல பங்களிப்புக்களை வழங்கி வருகின்றது. திருச்சபையில் அங்கத்துவம் வகிக்கும் குருக்கள் துறவியர், பொதுநிலையினர் எனப் பலரும் பாடசாலைகளில் அதிபர்களாக, ஆசிரியர்களாக, அதிகாரிகளாக கடமை புரிந்து வருகின்றனர். இவர்கள் இக்கல்விக்கு பல முன்னெடுப்புக்களை உருவாக்கி அதற்கான பல செயற்றிட்டங்களை ஏற்படுத்தி வருகின்றனர். பல பாடசாலைகளில் திருச்சபையின் பங்களிப்புக்கள் அதிகமாக உள்ளன.

இந்நிலையில் இலங்கையின் கல்வி மேம்பாட்டிற்கு தொடர்ந்தும் திருச்சபையினால் பல பங்களிப்புகள் வழங்கப்படலாம். திருச்சபையினால் இக்கல்விக்காக பல கருத்தமர்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

க.பொ.த. சாதாரணம், உயர்தரம் போன்ற பரீட்சைகளுக்கு விசேட வழிகாட்டல்கள் முன்னெடுக்கப்படுகின்றன. பல இலவச முகாம்கள், பயிற்சிப்பட்டறைகள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.வசதிகுறைந்த மாணவர்களுக்கு கியூடெக் போன்ற நிறுவனங்கள் மூலம் இக்கல்விக்காக பல உதவிகளும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு பல பணிகள் சிறப்பாக செயற்படுத்தப்படுகின்றன. இவ்விதம் இரண்டாம் நிலைக்கல்வி மேம்பாட்டிற்கு திருச்சபை தனது பங்களிப்புக்களை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

08. i. கிறிஸ்தவக் கலையின் மேம்பாட்டிற்கு மைக்கல் ஆஞ்சலோ, லியானாடோ டாவின்சி ஆகியோர் எவ்வாறான பங்களிப்புக்களை செய்தனர்?

கி.பி. 13ம் நூற்றாண்டின் பிற்பகுதி ஐரோப்பாவில் மறுமலர்ச்சிக் காலமாகக் கருதப்பட்டது. இக்காலத்தில் வாழ்ந்த ஓவியர்கள் மறுமலர்ச்சிக்கால ஓவியர்கள் என அழைக்கப்பட்டார்கள். இக்கால ஓவியர்களுள் மைக்கல் ஆஞ்சலோ, லியானாடோ டாவின்சி, பேட்டி செல்லி, பியாட்டோ டக்சியோ வசாரி மசக்கியோ புறூணலச்சி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர். இவர்களுள் கிறிஸ்தவக் கலையின் - மேம்பாட்டிற்கு மைக்கல் ஆஞ்சலோ, லியானாடோ டாவின்சி ஆகியோர் ஆற்றிய பங்களிப்புக்களை நோக்குவோம்.

**மைக்கல் ஆஞ்சலோ**

இவர் மிகச் சிறந்த சிற்பியும், ஓவியனும், கட்டடக் கலைஞனும் ஆவார். 12ம் நூற்றாண்டிலே கிரேக்க உரோமைய மறுசீரமைப்பின் பயனாக சிற்பக்கலை ஒரு சுதந்திரமான தனிக் கலையாக வளர்ச்சி கண்டது. வரலாற்றிலே கிறிஸ்தவ சிற்பக்கலையை சுதந்திரமான ஒரு கலையாக ஏற்படுத்தியவர் மைக்கல் ஆஞ்சலோ ஆவார். பியற்றா என்ற சிற்பமே இவரது முதன்மையான ஆக்கமாகும். மரித்த இயேசுவை அவருடைய தாயார் மடியில் தாங்கிய வண்ணமுள்ள காட்சியைப் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது. பளிங்குக் கற்களால் செதுக்கப்பட்ட அச்சிற்பம் பார்ப்போரின் உள்ளத்தை உருகச் செய்யும் அளவிற்கு தத்ரூப மானது.

ஆரம்பத்தில் களிமண், மாபிள் கற்களில் செதுக்கப்பட்ட சிலைகள் பின்னர் பொன், வெள்ளி வெண்கலம் போன்ற உலோகங்களிலும் செதுக்கப்பட்டன.

பிரான்சின் சாள்ஸ் அரசரின் தலைநகரம் கொன்ந்தாந்துநோபிளுக்கு மாற்றப்பட்ட போது தாவீதின் உருவச்சிலை இவரால் செதுக்கப்பட்டது. மோசேயின் உருவச்சிலையும் இவரது செதுக்கற் கலைக்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

மைக்கல் ஆஞ்சலோவின் பல சித்திரங்கள் இன்று உலகப் புகழ் பெற்ற சித்திரங்களாகத் திகழ்கின்றன. இவர் கி.பி. 1508இல் சிஸ்ரையின் சிற்றாலயத்தில் அதாவது திருத்தந்தையின் பிரத்தியேக சிற்றாலயத்தில் வரைந்த உலகப் படைப்பு, நடுத்தீர்வை, பரிசுத்த குடும்பம் என்பவற்றை விஸ்தரிக்கும் சிற்பங்கள் மிகவும் முக்கியமானவை. உலகப்படைப்புச் சித்திரத்தில் இறைவன் தனது நீட்டிய கரத்தினால் ஆதாமின் நீட்டிய கரத்தைத் தொட்டு உயிர் கொடுக்கும் காட்சி மிகவும் உயிரோட்டமுள்ளது. இறுதித் தீர்ப்பு ஓவியம் பார்ப்பவரின் மனதை சஞ்சலப்படுத்துவோடு அங்கே வரையப்பட்ட மனிதர்களின் தோற்றத்தையும் அமைதியற்ற நிலையிலே வைத்துள்ளார்.

இவரின் உலகப்புகழ் பெற்ற சித்திரங்கள் இன்றும் காணக் கூடியதாக உள்ளது.

**லியானாடோ டாவின்சி**

இவர் நவீன விஞ்ஞானத் தொழில் நுட்ப உபகரணங்களைத் தயாரிப்பதற்கு முன்னோடியாகக் கருதலாம். ஏனெனில் மோட்டார் வாகனம், விமானம், பரசூட், ஹெலிகொப்டர் போன்றவற்றை அவை கண்டுபிடிக்கப்பட முன்பே ஓவியமாக வரைந்தார். மனித உடற்கூறுகளையும் பார்த்து வரைந்தார்.

இவர் ஏழாயிரத்திற்கும் மேற்பட்ட ஓவியங்களை வரைந்துள்ளார். இவர் "தெய்வீக ஓவியர்" என அழைக்கப்படுகின்றார். கபிரியேல் தூதர் மங்கள வார்த்தை சொன்ன நிகழ்வை தத்ரூபமாக வரைந்துள்ளார். 1495இல் சாந்தமாயா மடாலயச் சுவரில் இவர் வரைந்த இறுதி இராவுணவு ஓவியம் முக்கியமான ஓவியமாகும். ஒருமைப்பாடு சமநிலை என்பவற்றை கவனத்தில் கொண்டு வரையப்பட்டதாகும்.

இவர் வரைந்த மொனாலிசா ஓவியம் கிறிஸ்தவ நோக்கத்தைக் கொண்டிராவிடினும் அச்சித்திரம் உலகப் புகழ் பெற்றதாகும்.

ii. ஓவியம், நாடகம் ஆகிய ஊடகங்கள் பாடசாலைக் கல்வியின் மேம்பாட்டிற்கு பயன்பட முடியும் என்பது பற்றிக் கட்டுரை வரைக.

ஓவியம், நாடகம் ஆகிய ஊடகங்கள் பாடசாலைக் கல்வியில் மாணவர்களின் ஆற்றல்கள் திறமைகளை

வளர்ச்சியடையச் செய்து அவர்களின் ஆளுமை வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்வதில் துணை புரியும் சாதனமாகும். இவ் ஊடகங்கள் அவர்களின் ஆற்றல்கள் திறமைகளை வெளிக் கொணர்வதற்கு உதவக் கூடியதாகும். ஆதலால் தான் பாடசாலைக் கல்வியில் அழகியற் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக் கப்பட்டுள்ளது. இக்கலையம்சங்கள் அவர்களின் பாடங்களில் சிறப்பிடத்தைப் பெறுகின்றன. கல்வியில் ஆர்வம் குறைந்த மாணவர்கள் கூட இக்கலையம்சங்களுடாகத் தமது திறமைகளை வெளிப்படுத்தி அவர்களின் எதிர்கால வாழ்வு சிறப்பிடம் பெறுவதற்கு காரணமாக அமைந்துள்ளன.

இக்கலையம்சங்கள் தனியே அவர்களது பாடத்தோடு மட்டுமல்லாது இக்கலையம்சங்களை வளர்த்தெடுக்கும் முகமாக பல போட்டிகளை பாடசாலை, கோட்ட, வலய, தேசிய ரீதியாக முன்னெடுத்து மாணவர்களின் திறமைகளை வெளிக்கொணர்வதற்கு பல வாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றன. இதனால் மாணவர்களிடையே இத்தகைய கல்வி நிலைகள் முன்னெடுக்கப்பட்டு பல மாணவர்கள் இத்துறைகளில் சிறந்தவர்களாக விளங்குவதை நோக்க முடிகின்றது.

பாடசாலைகளில் சித்திரம், நாடகமும் அரங்கியலும் என்ற பாடங்கள் இன்று சிறப்பிடங்களைப் பெற் றுள்ளன. மாணவர்கள் தொகுதிப்பாடங்களில் இவற்றைத் தெரிவு செய்து இலகுவாக தமது பெறுபேற்றில் சிறப்பிடத்தை பெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும். பாடசாலைகளில் மாணவர்களின் ஆற்றல்கள் திறமைகள் கவனத்திற் கொள்ளப்பட்டு அவர்கள் இப்பாடங்களைத் தெரிவு செய்வதற்கு வழிகாட் டப்படுகின்றன. மாணவர்களும் இப்பாடங்களைத் தெரிவு செய்வதில் ஆர்வமாக உள்ளனர்.

மேலும் உயர்தரத்தில் கலைப்பிரிவில் இப்பாடங்கள் மாணவர்களால் தெரிவு செய்கின்றனர். இப்பாடங்கள் மூலம் பல்கலைக்கழகத்திற்கு, தேசிய கல்வியற் கல்லூரிக்கு தெரிவு செய்யப்படுவதற்கு பல வாய்ப்புக்கள் உள்ளன. இவ்வாய்ப்புக்களை மாணவர்கள் பயன்படுத்தி பலர் பட்டதாரிகளாக வெளிவந்து பல வேலைவாய்ப்புக்களை பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கன. இத்தகைய ஊடகங்கள் பாடசாலைக் கல்வியின் மேம்பாட்டிற்கு பயன்பட முடியும் என்பது மறுக்கப்பட முடியாததாகும்.